**புத்தளம் நகர சபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

புத்தளம் நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து புத்தளம் நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான

கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,538,600 பெறுமதியான 02 காணிகள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாட்குறிப்பு இலக்கம் 92 (2023-01-01) இன் மூலம் சரிசெய்து காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | சரிசெய்யும் நாட்குறிப்குக்களானது நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுகின்ற ஆண்டின் இறுதித் திகதிக்கு முன்னராக இருத்தல் வேண்டும். |
| (ஆ) | தம்மன்னாவளப்வத்த என்ற பெயரிலான காணியை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யும் போது ரூபா 200,000 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு இலக்கம் 93 (2023-01-01) இன் மூலம் சரி செய்து காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | ரூபா 590,398 மொத்த பெறுமதியான கொடுக்கல் வாங்கல்கள் செலுத்த வேண்டிய செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாட்குறிப்பு இலக்கம் 94 (2023-01-01 இன் மூலம் சரிசெய்து ஏனைய கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | எல்பா வியாபார கடைத் தொகுதியினை நிர்மாணிக்கும் போது ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய 10 சதவீத பிடித்துவைத்தல் பணத்தில் ரூபா 15,247,164 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்குறிப்பு வவுச்சர் இலக்கம் 96 (2023-01-01) இன் மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (உ) | எல்பா கடைத்தொகுதியினை நிர்மாணிப்பதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 200,000,000 கடன் பணத்திற்கான உரிய வட்டி ரூபா 4,500,000 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தற்பொழுது சரிசெய்ய்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஊ) | கேட்போர் கூடத்திற்கு மின்சார இணைப்பினை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 1,483,525 பணம் நிலையான சொத்துக்களின் கிழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாட்குறிப்பு வவுச்சர் இலக்கம் 97 (2023-01-01) இன் மூலம் சரி செய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (எ) | மீளாய்வாண்டில் ரூபா 920,562 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு தாய்ப்பால் வழங்கும் அறை மற்றும் காத்திருக்கும் நிலையம் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாட்கறிப்பு வவுச்சர் இலக்கம் 99 (2023-01-01) இன் மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகுதியாக விருந்த ரூப 17,370 பெறுமதியான பசளை இருப்பானது கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பசளை இருப்பு ரூபா 17,370.00 பெறுமதியினை பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாட்குறிப்பின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 06 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதிக்கும் பட்டோலைகளின் பிரகாரமான பெறுமதிக்குமிடையே ரூபா 2,086,257 வித்தியாசம் காணப்பட்டது. | கணக்கு மீதிக்கும் பட்டோலை மீதிகளுக்குமிடையான வித்தியாசம் சம்பந்தமான தகவல்களை ஆராய்ந்து பார்த்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பட்டோலைகளிலுள்ள மீதிகளையும் கணக்கு மீதிகளையும் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 651,197,614 பெறுமதியான 06 கணக்கு மீதிகளை நாளதுவரையாக்கிய நிலையான சொத்துக்கள் பதிவேடு பொருள் இருப்பு பதிவேடு, பட்டோலைகள் அல்லது இருப்பு மீளாய்வுச் சபை அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலுள்ள விபரம் அதுவரை நாளதுவரையாக்கப்பட்டிருக்காததுடன் தற்பொழுது நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. | நாளதுவரையாக்கிய நிலையான சொத:துக்கள் பதிவேடு, பொருள் இருப்பு பதிவேடு, மீளாய்வுச் சபை அறிக்கை பட்டோலை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான தொடர்புகள் | | | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | | |
| | (i) | நி.பி 104 (3) | 2018 திசெம்பர் 31 ஆந் தகிதியன்று களஞ்சியம் தீப்பிடித்ததினால் ஏற்பட்ட ரூபா 2,255,975 நட்டம் சம்பந்தமாக தொடக்க அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை | முழுமையான அறிக்கையினை சமர்ப்பிப்பதற்குரிய புலனாய்வினை மேற்கொள்ளுமாறு தெரிவித்து 2023-04-25 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆந் திகதி இரண்டாவது தடவையும் ஞாபகப்படுத்தல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | |
| | (ii) | நி.பி 110 | காணாமல் போதல் மற்றும் சேதமடைதல் சம்பந்தமாக சேதங்கள் மற்றும் நட்டங்கள் பதிவேட்டில் பதியப்பட வேண்டிய போதிலும் இந்த நட்டத்தை பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய புலனாய்வினை மேற்கொண்டு நட்டத்தின் பெறுமதியை சரியாக மதிப்பீடு செய்ததன் பின்னர் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டில் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஆ) | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவை | | | | |
| (அ) | (i) | 3.4 ஆம் பந்தி | பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது விலை மனுக்களைக் கோரி கொள்வனவு செய்யப்பட வேண்டிய போதிலும் வாய்மொழி மூலம் தெரியப்படுத்துதலின் அடிப்படையில் ரூபா 395,000 பெறுமதியான ஒரு டேலர் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பொதுச் சபைக்கு சமர்ப்பித்து கொள்வனவு செய்யப்பட்டது. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | 8.9.1 (ஆ) | ரூபா 500,000 இனை மிகைத்த சேவைகளுக்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதி கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும் கூலி வழங்கும் சேவைக்காக அவ்வாறு உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | -மேற்படி- |

**1.7.2 வரித் தேவைப்பாடுகளுடனான இணக்கமின்மை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2020 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து பெறுமதி சேர் வரியிலிருந்து நகரசபை விடுவிக்கப்பட்டிருந்ததனால் இன்னும் எதிரீடு செய்ய முடியாதிருந்த 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி சேர் வரி கணக்கில் ரூபா 3,090,905 வரவு மீதி காணப்பட்டது. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கான பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிபாரிசுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 28,817,185 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவுகள் ரூபா 5,098,968 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீத வரியும் வரியும் | 18,144 | 23,279 | 6,736 | 102,120 | 18,435 | 22,589 | 6,373 | 98,559 |
| வாடகை | 102,520 | 58,561 | 30,611 | 22,004 | 52,669 | 39,444 | 30,624 | 12,365 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 2,944 | 1,259 | 1,259 | - | 1,600 | 653 | 653 | - |
| ஏனைய வருமானம் | 30,191 | 19,313 | 19,313 | - | 3,700 | 14,009 | 14,009 | - |
| மொத்தம் | 153,799 | 102,412 | 57,919 | 124,124 | 76,404 | 76,695 | 51,659 | 110,924 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| (i) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வீதவரி மற்றும் வரிப்பணமான ரூபா 23,279,069 தொகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 6,735,549 சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அது பட்டியலிடப்பட்ட பணத்தில் 29 சதவீதத்தினை விட குறைந்த பெறுமதியாகும். | பொதுமக்களுக்கு இன்னல்கள் ஏற்படாத வகையில் வீதவரியினை அறவிடல் மேற்கொள்ளப்பட்டதனால் வீதவரியினை அறவிடலானது பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 29% ஆன பெறுமதியை சுட்டிக் காட்டுகின்றது. | ஆண்டிற்கான பட்டியலிடப்பட்ட வருமானத்தை ஆண்டிற்குள்ளேயே அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) மீளாய்வாண்டில் ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த ரூபா 98,559,138 தொகையான வீதவரி மற்றும் வரிப் பெறுமதியில் மிளாய்வாண்டின் போது ரூபா 11,656,213 மாத்திரம் | இந்த நிலுவைப்பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்காக வெளிக்கள துறையில் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கும் நடமாடும் சேவைகளை | நிலுவை வருமானத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அது ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த பெறுமதியில் 12 சதவீதமான குறைந்த பெறுமதியாகும். | நடாத்துவதற்கும் ஆதனங்களை தடைசெய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்குமான நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன . | |
| (iii) | 2018, 2019 , 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட கட்டிடங்களுக்காக இணக்கப்பாட்டு சான்றிதழ் வழங்கப்பட்டு வீதவரி மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது குறைந்த வீத வரிப் பெறுமதி அறவீடு செய்யப்பட்டிருந்ததனால் நகர சபைக்கு கிடைக்க வேண்டிய அதிக அளவான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் அறிக்கையை அனுப்புவதிலுள்ள தாமதத்தினால் இப்பணத்தை அறவீடு செய்வதில் சிக்கல் காணப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட கட்டிடங்களின் விண்ணப்ப பத்திரங்களுக்காக வீதவரி மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வீதவரி மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு 2022 ஆம் ஆண்டிற்காகவும் வீதவரி அறவிடப்பட்டு வந்திருந்தது. | மதிப்பீட்டு திணைக்களத்தினால் புதிய வீதவரி மதிப்பீடு செய்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. | புதிய வீதவரி மதிப்பீட்டினை மேற்கொண்டு வருமானத்தினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஆ) **வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட கடைவாடகை மற்றும் குத்தகை வாடகை ரூபா 58,560,820 தொகையில் ஆண்டின் போது ரூபா 30,610,604 சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அது பட்டியலிடப்பட்ட பெறுமதியில் 52 சதவீதமான அளவாகும். | கடை வாடகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்கான பட்டியலிடப்பட்ட வருமானத்தை ஆண்டிற்குள்ளேயே சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டில் இருந்த நிலுவையாக இருந்த கடைவாடகை மற்றும் குத்தகை வாடகை | கடை உரிமையாளர்களுக்கு கடிதத்தின் மூலமும் இடத்திற்குச் சென்று | நிலுவை வுரமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| வருமானம் ரூபா 12,364,899 தொகையில் ஆண்டின் போது ரூபா 5,049,244 சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அது ஆண்டின் ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த பெறுமதியில் 41 சதவீத அளவாகும். | தெரியப்படுத்தியும் கடைக்கு சீல் வைத்தல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களின் மூலமும் நிலுவையான கடை வாடகைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வு தொடர்பாக 114 பொருள் விடயங்களின் பற்றாக்குறையும் 76 பொருள் விடயங்களின் மிகைகளும் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடைந்த பொருட்களை ஏலத்தில் விற்றதன் பின்னர் தீர்த்துவைக்கப்படும். | பொருள் மீளாய்வு அறிக்கையின் சிபாரிசகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சயன்ஸ் லேன்ட் சொப்ட்வெயர் கம்பனியிடமிருந்து ரூபா 1,050,000 பெறுமதியான ரிபாஸ் மென்பொருள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த மென்பொருளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 175,000 பெறுமதியான வவுச்சர்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே இந்தமென்பொருக்குள் உள்ளடக்கப்பட்டிருந்த களஞ்சிய மென்பொருள் மற்றும் சம்பளங்கள் வேதனங்கள் மென்பொருள் 2022 ஒக்தோபர் 05 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்காததனால் 09 ஆண்டுகள் காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | களஞ்சிய மென்பொருளையும் சம்பளங்கள் வேதனங்கள் மென்பொருளையும் பயன்படுத்துவதற்கு தற்பொழுது தரவுகள் உள்ளடக்கப்பட்டு வருகின்றது. | களஞ்சிய மென்பொருள் மற்றும் சம்பளங்கள் வேதனங்கள் மென்பொருளை பயன்படுத்துவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | எல்பா வியாபார கடைத்தொகுதியை நிர்மாணித்தல் | | |
| | (i) அனைத்து கடைகளையும் விறபதன் அடிப்படையில் சபைக்கு கிடைக்க வேண்டிய முன் பணத்தின் (Key Money) பெறுமதி ரூபா 717 மில்லியனாக இருந்த போதிலும் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தி 03 ஆண்டுகளுக்கு அண்மித்த | புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு முன்னர் பணத்தை அறவிடும் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது. | முன்பணத்தை அறவீடு செய்யும் நடவடிக்கையை துரிதப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலம் கடந்திருந்தும் சபையினால் சேகரிக்கப்பட்ட பெறுமதி ரூபா 253 மில்லியன் மாத்திரமாக இருந்ததுடன் அது மொத்தப் பெறுமதியில் 35 சதவீதமாகும். | | |
| (ii) | கடைகளை குத்தகைக்கு வழங்குவது தொடர்பான கேள்வி நிபந்தனை 12 இன் பிரகாரம் தளமாடியின் கூரை மட்டம் வரை வேலை முடிவடைந்ததன் பின்னர் முன்பணம் (Key Money) முழுவதும் செலுத்தி முடிவுறுத்தப்பட வேண்டியதுடன் 2020 நவம்பர் மாதமளவில் தளமாடியின் வேலை கூரை மட்டம் வரை முடிவடைந்திருந்தது. 2022 ஒக்தோபர் மாதம் முடிவடைகையில் செயற்திட்டம் ஆரம்பித்து 03 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்தும் தளமாடி தொடர்பான கேள்விப் பெறுமதியில் 100 சதவீதம் வரை செலுத்தி முடிவடைந்திருந்ததானது 62 கடைகளில் 11 கடைகளுக்க மாத்திரமாகும். | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிகள் பணத்தை செலுத்தாத உரிமையாளர்களுடனான உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அந்த கடைகளுக்கு மீண்டும் கேள்வி கோருவதற்கு தேவையான நடவடிக்கை ஆயத்தம் செய்யப்பட்டு வருகின்றது. | கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | கேள்வி நிபந்தனை 13 இன் பிரகாரம் அத்திவார வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் தற்காலிகமாக புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுதல் வேண்டும். எனினும் அத்திவார வேலைகள் 2020 பெப்ரவரி மாதமளவில் முடிவடைந்திருந்தும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுதல் 2022 | ரூபா 300.7 மில்லியனுக்கு அண்மித்த முன்பணம் அறவிடப்பட்டுள்ளது. மிகதிப் பணத்தையும் துரிதமாக அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| ஆகஸ்ட் மாதம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களால் நடவடிக்கை எடுக்கப்படாமையின் அடிப்படையில் சபைக்கு தெரியப்படுத்தப்படாது கடைகளை பெற்றுக்கொண்ட நபர்களால் ஏனைய நபர்களுக்கு அதிக பெறுமதிக்கு விற்பதன் மூலம் இலாபம் பெறுவதற்கு சந்தர்ப்பம் வழங்கியமை, ஒரு பகுதியினை செலுத்தியதன் பின்னர் உரிமையை மாற்றுதல் இடம்பெற்றமை, உடன்படிக்கை நிபந்தனைகளை மீறியதன் அடிப்படையில் உடன்படிக்கையினை முடிவுறத்துவதற்கு சபைக்கு முடியாதிருந்தமை, நிலுவைப் பணத்தை செலுத்தாததன் அடிப்படையில் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பது சிக்கலுடையதாக இருத்தல் போன்ற நிலைமை உருவாகியிருந்தது. | | |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| புத்தளம் நகர சபைக்கு ஒப்படைத்தல் கட்டளையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட 09 திட்ட வரைபடங்களினால் தகமைபெற்ற 469 ஏக்கர் 06 ரூட் 09 பேச்சர்ஸ் அளவான 39 காணிகளின் பௌதீக உரிமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு சபைக்கு முடியாதிருந்ததுடன் இந்த அனைத்து காணிகளையும் தற்பொழுது அதிகாரமற்ற குடியிருப்பாளர்கள் காலத்துக்கு காலம் பிடித்துள்ளார்கள். மேலும் | பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | காணிகளின் உரிமையை உறுதிப்படுத்தி பொறுப்பேற்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நகர சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 51 காணிகளின் உரிமையானது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு/மஹாவெலி அதிகார சபை அல்லது ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமானதாக இருந்ததுடன் அவற்றினை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் நிறைவேற்று, மூன்றாம், இரண்டாம் மற்றும் ஆரம்ப தரங்களைச் சேர்ந்த 79 ஊழியர்கள் வெற்றிடமாகவும் இரண்டாம் மற்றும் ஆரம்ப தரங்களைச் சேர்ந்த 93 ஊழியர்கள் மிகையாகவும் இருக்கின்றமை அவதானிக்கப்பட்டது. | சுகாதார வேலையாட்கள் மற்றும் வேலையாட்கள் பதவிகளில் ஊழியர்களை ஈடுபடுத்தி பொதுமக்கள் சேவை மேற்கொள்ளப்பட்டதனால் ஆரம்ப பதவித்தரத்தில் மிகைகள் உருவாகியிருந்தது. | வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கும் மிகையான பதவிகளை அங்கீகரிக்கச் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையின் பல்வேறு வருமானச் சேகரிப்புக்களுக்காக 05 ஊழியர்கள் உழைக்கின்ற வருமானத்தில் 30 சதவீதத்தினைச் செலுத்துதல் என்ற அடிப்படையில் நகரசபைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். அந்த ஊழியர்களைச் சேர்த்துக்கொண்ட திகதி அல்லது சேர்த்துக்கொள்வதற்கான அங்கீகாரம் சபையிடம் இல்லாததுடன் 2022 ஆம் ஆண்டில் மாத்திரம் ரூபா 1,010,883 செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த ஊழியர்களைச் சேர்த்துக்கொண்ட திகதி அல்லது சேர்த்துக்கொள்வதற்கான அங்கிகாரம் சபையிடம் இல்லாததுடன் இந்த ஊழியர்களுக்கு முறையான நியமன கடிதங்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இது 14 ஆவது சபைக் கூட்டத்திற்கு முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானம் என்பதனால் இது சம்பந்தமான உரிய தகவல்கள் ஆவணக்காப்பகத்தில் தேடிப்பார்க்கப்படுகின்றன. | உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (இ) | ஓய்வுபெற்றுச் சென்ற 94 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 179,694 கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 179,694 தொகையினை பதிவழிப்பதற்கான அங்கீகரத்திற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய கடன் மீதியை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டிருந்த 10 நானாவித செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 3,875,600 பணம் செலவு செய்யப்பட்டிருந்தும் எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைநது கொள்ளாமைக்கு கடந்த ஆண்டில் ஆரம்பமான பொருளாதார பிரச்சினையே அடிப்படைக் காரணமாகும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டங்களை எதிர்பார்த்தவாறு நிறைவேற்றுதல் வேண்டும். |

**4.2 பாதீட்டுக் கட்டுபாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| நடைமுறைச் சாத்தியமாக மற்றும் சரியாக மதிப்பீடு தயாரிக்கப்படாமையின் காரணமாக 79 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 298,329,764 நிதி ஏற்பாட்டு பணம் முழுவதும் சேகரிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட எரிபொருள் சிக்கலின் காரணமாக நாட்டில் உருவாகிய பொருளாதார சிக்கலினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கைகளை முறைப்படியாக மதிப்பீடு செய்யப்பட்டு பாதீட்டு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக இனங்காணப்பட்ட 08 செயற்பாடுகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 08 செயற்பாடுகளை முழுமையாக நிறைவேற்றுவதற்கு முடியாமைக்கான காரணம் அக்காலத்தில் உருவாகியிருந்த எரிபொருள் சிக்கலும் நாட்டில் உருவாகியிருந்த மட்டுப்பாடற்ற விலைகளின் மாற்றங்களுமாகும். | இனங்காணப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |